RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt22420

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# கோவேறு கழுதைகள் காட்டும் சலவைத் தொழில் செய்யும் வண்ணார் குல மக்களின் நிலை

**பா. நித்ய பிரிய மீனா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620022, தமிழ்நாடு, இந்தியா.

# The Condition of the Washermen who do the laundry as shown 'Koveru kazhuthaigal (Mules)'

**P. Nithya Priya Meena** [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Tiruchirappalli–620022, Tamil Nadu, India

* Corresponding Author: nithyapackiyaraj@gmail.com

Received: 19-01-2022
Revised: 30-08-2022
Accepted: 11-09-2022
Published: 12-10-2022

Check for updates

**ABSTRACT**

Human beings are rational in God's creation. In the early years, the occupations which were divided among themselves separately for the betterment of man are later divided on the basis of class. Thereafter, they create caste and divide certain castes into lower castes and other castes into upper castes. In a town where all the people live together, the last street is named colony street, where the lower caste people are excluded. These lower caste people are not allowed to enter the village freely even for festival-like events. Though there is an economy to buy quality food and clothing, the upper castes do not allow them to buy it. Vannar Kudi (Washermen Colony) is one such divided society. This article explains the condition of the washer people who are engaged in the business of washing.

**Keywords:** Vannar Kudi, Washermen, Occupation, Castes, Koveru kazhuthaigal

## முன்னுரை

இறைவன் படைப்பில் மனிதர்கள் பகுத்தறியும் தன்மை கொண்டவர்கள். ஆரம்ப காலகட்டங்களில் மனிதனின் முன்னேற்றத்திற்காக தங்களுக்குள் தனித்தனியே பிரித்து செய்யப்பட்ட தொழில்களே பிற்காலத்தில் வர்க்க அடிப்படையில் பிரித்து விடுகின்றனர். அதன் பின்னர் சாதியை உண்டுபண்ணி, குறிப்பிட்ட சாதிகளை கீழ்சாதியாகவும், பிற சாதிகளை மேல்சாதியாகவும் பிரிக்கின்றனர். மக்கள் அனைவரும் சேர்ந்து ஒன்றாக வாழும் ஒரு ஊரில், கடைசி தெருவை காலனித் தெரு என்று பெயரிட்டு, அங்கு கீழ்சாதி மக்களை ஒதுக்கிவிடுகின்றனர். இந்த கீழ்சாதி மக்கள் திருவிழா போன்ற நிகழ்வுகளுக்கும் ஊருக்குள் சுதந்திரமாக வருவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. தரமான உணவு, உடை வாங்கிக் கொள்ள பொருளாதாரம் இருந்தாலும், அதனை வாங்க மேல்சாதியினர் அனுமதி அளிப்பதில்லை. அவ்வாறு பிரிக்கப்பட்ட சமூகத்தில் ஒன்றுதான் வண்ணார் குடி ஆகும். சலவைத் தொழில் செய்யும் வண்ணார் குல மக்களின் நிலையை இக்கட்டுரை விளக்குவதாக உள்ளது.

## அடித்தள மக்கள் நிலை

சமூகத்தில் தங்களுக்கு இளைக்கப்படும் அநீதிகளை எதிர்த்து பேச முடியாத நிலையில் அடித்தள மக்கள் உள்ளனர். அடித்தள மக்களின் நிலையை ஆ.சிவசுப்பிரமணியன் அவர்கள்,

“உழைக்கும் மக்களில் பெரும் பகுதியினரைத் தீண்டாமை என்ற நிலைக்கு இந்திய நிலப்பிரபுத்துவம் ஆளாக்கி வைத்துள்ளது. குறிப்பிட்ட பிரிவு மக்களைத் தொட்டால் தீட்டு ஏற்படுமென்று விலகிச் சென்றும் எதிர்பாரத வகையில் தொட்டுவிட்டால் நீராடியும் தீட்டிலிருந்து உயர் சாதியினர் தம்மைப் பாதுகாத்துக் கொள்கின்றனர்” என்று அடித்தள மக்கள் வரலாறு என்ற படைப்பில் குறிப்பிட்டுள்ளார் (Sivasubramanian, 2002).

## வண்ணார் பெயர்க் காரணமும் வாழ்க்கை முறையும்

வண்ணார் என்ற சொல் வண்ணம் என்ற தமிழ் சொல்லில் இருந்து வந்திருக்கலாம். இதற்கு “அழகு” என்று பொருள் உண்டு. வண்ணார்கள் துணிக்கு வண்ணம் ஊட்டுபவர்களாகவும் துணிகளில் ஓவியம் தீட்டுபவர்களாகவும் இருந்துள்ளனர். வண்ணார் என்று அழைக்கப்படும் சலவைத் தொழில் செய்பவர்கள் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் வட மாநிலங்களில் தோபி (டோபி) என்றும் இலங்கையில் ராஜாகா என்றும் அழைக்கப்பட்டனர். சலவைத் தொழிலாளர்களுக்கு துணி துவைக்க நீர் அவசியம் என்பதால் நீர் நிறைந்த மருத நிலத்தில் வாழ்கின்றனர். இவர்கள் ஆயுர்வேத மருத்துவத்தில் ஈடுபட்டனர். வீட்டு ஊழியர்களாகவும் பணியாற்றினர். தொடக்க காலத்தில் துணி துவைக்கும் தொழிலினை மட்டுமே செய்துவந்த இவர்கள் பின்னர் இறப்பு வீடுகளில் இறுதிச் சடங்கு செய்பவர்களாகவும், திருமணச் சடங்குகளில் மனைவிரித்தல் முதலான பணியிலும், பிறப்பு மற்றும் சடங்கு வீடுகளில் தீட்டுக் கழிப்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

## துணிவெளுக்கும் பெண்களின் நிலை

கோவேறு கழுதைகள் என்ற புதினம் ஆரோக்கியம், சகாயம், மேரி ஆகிய பெண்களைப் பற்றி விவரிக்கிறது. இப்புதினம் முழுவதும் ஆரோக்கியம் என்ற சலவைத் தொழிலாளியின் மகள் தான் பேசப்படுகிறாள். இவள் இருக்கும் ஊரில் நிகழும் மங்கள காரியங்கள், இறப்பு, பிரசவம் போன்ற அனைத்து காரியங்களுக்கும், துணிகளைத் துவைப்பதற்கும் ஆரோக்கியம் தேவைப்படுவாள். ஒரு நாள் ஆரோக்கியத்திற்கு உடல்நலம் சரியில்லாததால், அவளது மகள் மேரி ஊருக்குள் துணி எடுக்கச் சொல்கிறாள். முதல் முறையாக மேரி துணி எடுக்கச் சொல்கிறாள். அங்கு காலனியில் இருந்த சடையன் என்பவன் அவளைச் சீண்டி பாலியல் வன்கொடுமை செய்கிறான். அப்போது மேரி,

“வாண்டாம் சாமி…”

“தப்பு சாமி…”

“நல்லதில்ல சாமி…”

“மானம் மருவாத பூடும் சாமி…”

“தெருவுல தலகாட்ட முடியாது சாமி…”

“குடும்பம் அயிஞ்சிபூடும் சாமி…” (Imayam, 1994)

என்ற வார்த்தைகளைத் தவிர அவளால் வேறு எதுவும் செய்ய இயலவில்லை. இத்தகைய சூழலில் கூட அவளால் தனக்கு நடந்த கொடுமையை வெளியில் கூற முடியவில்லை. ஆரோக்கியத்தின் மருமகள் சகாயம் தனது கணவருடன் வேறு ஊருக்குச் சென்று விடுகிறாள். இறுதியில் ஆரோக்கியம் உடலாலும், மனதலாலும் மற்றும் உழைப்பாலும் துன்பப்படுவதாகக் காட்டப்படுகிறாள்.

## தொழில் நிலை

வண்ணார் குடி மக்களின் முதன்மைத் தொழில் அழுக்குத் துணிகளை ஒவ்வொரு வீட்டிலும் சென்று வாங்கி, துவைத்துக் கொடுப்பதாகும். துணிகளைத் துவைத்துக் கொடுப்பதே முக்கிய தொழிலாக

கொண்டுள்ளனர். மேலும், அறுவடை காலங்களில் தானியங்களை அறுவடை செய்வது முதல் அப்புறப்படுத்துவது வரையில் உள்ள அனைத்து வேலைகளுக்கும் உதவுவார்கள்.அவர்கள் வாழும் ஊரில் உள்ள வீடுகளில் இறப்பு ஏற்பட்டால் முதலில் வந்து நிற்பது வண்ணார் குடியாகத்தான் இருக்கும். பிணத்திற்கு பாடை கட்டி, அடக்கம் செய்வது வரையிலும் உள்ள அனைத்து சடங்குகளையும் செய்வர். மேலும் பிரவசம் பார்த்தல், இறப்பு சடங்குகள் செய்தல், பெண்ணின் பூப்படையும் நிகழ்வுகள் போன்ற அனைத்து நிகழ்வுகளிலும் இவர்கள் தான் சடங்குகள் செய்ய வேண்டும். எனவே வண்ணார் குடிமக்கள் வெளியூர்களில் உள்ள கோயில் மற்றும் பிற நிகழ்வுகளுக்கு செல்வதாக இருந்தாலும் அந்த ஊர் மக்களின் அனுமதி பெற்றே செல்ல வேண்டிய நிலையில் இருந்தனர்.

## உணவு முறை

இமையம் அவர்கள் துணி துவைக்கும் மக்களின் உணவு முறைகளைப் பற்றியும், அதற்கான தானியங்கள் சேமிப்பு பற்றியும் இப்புதினத்தில் குறிப்பிட்டுள்ளார்.வண்ணார் குடியில் "ஊர்ச் சோறு எடுத்தல்" என்ற வழக்கம் இருந்துள்ளதாக இமையம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று உணவு வாங்கி இரவு உணவு உண்பார்கள். இந்தச் செயல் ஆரோக்கியத்தின் மருமகள் சகாயத்திற்கு பிடிக்காது. ஒருமுறை ஆரோக்கியம் சகாயத்தை ஊர்ச் சோறு வாங்க அனுப்பினாள். அப்பொழுது சகாயம், "சோத்துக் குண்டான இடுப்புலியும், குழம்புக் குண்டானக் கையிலியும் வச்சிக்கிட்டு வூடுவூடாய் போய் நின்னு 'அம்மோவ் வண்ணாத்தி வந்திருக்கன் சோறு போடுங்கோனு' கத்தச் சொல்றியா?" என்று ஆரோக்கியத்திடம் கேட்டாள். எனவே அவள் வீட்டிலேயே சமைத்து உண்பாள். ஆனால், சவுரி வீட்டில் சமைத்த உணவை விட ஊர்ச்சோறு எடுத்து உண்டால் தான் நிம்மதியாக உறங்குவான் (Imayam, 1994).

## பொருளாதார நிலை

சலவைத் தொழில் செய்யும் மக்களுக்கு ஒவ்வொரு சடங்கு நிகழ்வுகளிலும் தானியங்கள் மற்றும் பணம் கொடுப்பார்கள். மேலும் ஆரோக்கியத்தின் மகள் மேரி கிழிந்த துணிகளை தைத்துக் கொடுப்பாள். அதற்கு கூலியாக தானியங்கள் பெறுவாள்.அறுவடைக் காலங்களில் இரண்டு மரக்கால் மூன்று மரக்கால் தானிங்கள் பெற்றனர். மேலும் இறுதிச் சடங்குகளில் அதிக உறவினர்கள் இருந்தால் கோடித் துணி போடுபவர்கள் தானியங்கள் மற்றும் பணம் வழங்குவார்கள். துணிகளை வெளுத்து கொடுப்பதால் அதிலும் கூலியாக தானியம் அல்லது பணம் பெறுவர். இவற்றை விற்று நகை வாங்குதல் அல்லது திருமணக் காரியங்களை நிகழ்த்திக் கொண்டனர்.

## பிற இலக்கியங்களில் சலவைத் தொழிலாளர்கள்

"அப்பிலே தோய்த்திட்டு அடுத்தடுத்து நாம் அதனைத்

தப்பினால் நம்மையது தப்பாதோ - இப்புவியில்

இக்கலிங்கம் போனால் என்? ஏகலிங்க மாமதுரைச்

சொக்கலிங்கம் உண்டே துணை" (Balasundaram, 1990)

இரட்டைப் புலவர்கள் பாடிய இந்தப் பாடலில் கலிங்கம் என்ற சொல் துணி என்ற பொருளிலும், சொக்கலிங்கம் இறைவனையும் குறித்து வருகிறது. இத்தகைய துணிகளை அழுக்கு நீக்கி சுத்தம் செய்பவர்கள் பற்றி இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன.

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் என்பவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் ஆவார். இவர் சூரியகுலம் என்னும் வண்ணார் மரபில் பிறந்தவர். சிவன் மீது கொண்ட அன்பின் காரணமாக சிவனடியார்களின் துணிகளை வெளுத்துக் கொடுப்பதை தனது முதல் பணியாகக் கொண்டிருந்தார்.

வண்ணார்குடி ஆண்களை “காழியர்” என சங்க இலக்கியங்கள் குறிக்கின்றது. இச்சமூகத்தில் உள்ள பெண்கள் “புலைத்தி” எனச் சுட்டப்படுகின்றனர். இவர்கள் சலவை செய்த துணிகளைக் கஞ்சியில் நனைத்துக் காய்ச்சி விரைப்புடன் காயவைத்துள்ளனர் என்பதை அகநானூற்றுப் பாடல் குறிக்கிறது.

“பசைவிரல் புலைத்தி

நெடிதுபிசைந்து ஊட்டிய

பூந்துகில் இமைக்கும்”

அகநானூற்றில் புலைத்தி என்பவள் ஊரில் உள்ளவர்களின் துணிகளை துவைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறாள் என்று குறிக்கப்பட்டுள்ளது (Murugasamy, 2004).

நற்றினைப் பாடல் ஒன்று சலவைத் தொழிலாளர்கள் களர் நிலத்தில் ஊற்றுக் கிணறுகளைத் தோண்டித் துணி வெளுக்கும் தொழிலில் ஈடுபட்டனர் என்று கூறுகிறது.

“வளன் புலைத்தி எல்லித்

தோய்த்தப்

புகார்ப்புகர் கொண்ட புன்பூங்

கலிங்க மொடு”

என்னும் வரிகள் தெரிவிக்கின்றது” (Venkataraman, 2013)

குறுந்தொகையில் புலைத்தியர் துணிக்கு வண்ணம் ஏற்றியச் செய்தி உள்ளது.

“நலந்தகைப் புலைத்தி

பசைதோய்த்து எடுத்துத்

தலைப்புடைப் போக்கித் தண்கயத்

திட்ட”

என்ற வரிகள் ஆடையை வெளுத்தவுடன் சாயமிட்டுச் சுருக்கங்கள் நீக்குமாறு ஆடையினை உதறிக் காயவைத்தனர் என்பதை விளக்குகிறது (Swaminatha Iyer, 2009).

பாண்டிய நாட்டில் பெய்த பெருமழையால் உடைந்த ஏரிகளைச் சீரமைக்க வீட்டிற்கு ஒரு ஆள் வர வேண்டும் என்று மன்னன் கட்டளையிடுகிறான். அந்த ஊரில் வந்தி என்னும் மூதாட்டி வாழ்ந்து வந்தாள். அவள் சிவன் மீது அதிக பற்று கொண்டவள். அவள் வயது மூப்பின் காரணமாக ஏரியை சீரமைக்க செல்ல இயலவில்லை. அவள் தனது இயலாமையை எண்ணி சிவனிடம் மனம் உருகி வேண்டுகிறாள். அவரது வேண்டுதலை ஏற்ற சிவன் மானிட உருவில் வந்து தனக்கு சுவையான பிட்டு தந்தால் ஏரி சீரமைப்பிற்கு தான் செல்வதாகக் கூறுகிறார். இவ்வாறு சிவபெருமான் “பிட்டுக்கு மண் சுமந்த வரலாற்றில்” வரும் மூதாட்டியும் வண்ணார் மரபினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

வளாந்து வரும் சமூக சூழ்நிலையில் ஒவ்வொருவரும் தங்களை சிறந்தவாகளாகவே காட்டிக் கொள்ள முயற்ச்சிக்கின்றனர். இத்தகைய முயற்சியில் பலர் பின்நோக்கித் தள்ளப்படுகின்றனர். அவ்வாறு உருவானவர்களே அடித்தள மக்கள், பல இலக்கியங்களில் அடித்தள மக்களைப் பற்றி கூறுவதில்லை, அனைவரும் சமம் என்ற நோக்கில் பயணிக்கும் இன்றைய காலகட்டங்களில் சிலர் அடித்தள மக்கள் பற்றி தமது எழுத்துகள் மூலம் வெளிஉலகிற்கு தெரிவிக்கின்றனர். அந்த வகையில், துணி துவைக்கும் சலவைத் தொழிலாளர்கள் பற்றிய செய்திகளையும் அவர்கள் அடைந்த துன்பங்களை பற்றி சில எழுத்தாளர்கள் எழுதியுள்ளனர். த.தனஞ்செயன் என்ற ஆசிரியர் தமிழகத்தில் புரத வண்ணார்கள் என்ற நூலிலும், ஆ.சிவசுரப்பிரமணியன் அவர்களின் தமிழக வண்ணார் வரலாறும்

வழக்காறுகளும் என்ற நூலிலும். அடித்தள மக்கள் வரலாறு என்ற நூலிலும் அடித்தள மக்களின் துன்பங்கள் விளக்கப்பட்டுள்ளது.

## References


Balasundaram, S. (1990) Thanipadalthirattu, 2nd Ed, Thanjavur Sarasvathi Mahal Library, Thanjavur, India

Imayam, (1994) Koveru Kazhuthaigal, 6th Ed, Kriya Publication, Chennai, India.

Murugasamy, T. (2004) Agananooru, Koviloor Madalayam, Koviloor, India

Sivasubramanian, A. (2002) Adithala Makkal Varalaru, New century Book house, Chennai, India

Swaminatha Iyer, U.V. (2009) Kurunthogai, U.Ve.Sa Library, Chennai, India.

Venkataraman, H. (2013) Natrinai, 3rd Ed, U.Ve.Sa Library, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License